**MCOP No.40/2019**

**Date :25.04.2022**

***ம.சா.1 கோமதி***

***1ஆம் எ.தகு.வி***

இறந்துபோன முருகேசன் என்னுடைய கணவர் ஆவார். என்னுடைய கணவரின் வயது, வருவாய், தொழிலை காட்டக்ககூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. சம்பவ சமயம் 1ஆம் எதிர்மனுதார் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமமும், வாகனத்திற்கு காப்பீடும் முறையாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே 1ஆம் எதிர்மனுதார் இழப்பீடு தொகை எதுவும் வழங்க கடமைப்பட்டவர் கிடையாது என்றால் சரியல்ல.

**2ஆம் எ.த.கு.வி**

சம்பவ விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ விபத்து சமயம் என்னுடைய கணவர் சென்ற இரு சக்கர வாகனத்தில் வேறு எத்தனை நபர்கள் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் கூலி வேலை செய்து வந்தார். என்னுடைய கணவரின் ஓட்டுநர் உரிமம், வாகன காப்பீட்டினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. சம்பவத்தின் பொழுது என்னுடைய கணவர் மது அருந்தி இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. என்னுடைய கணவரின் வயது, வருவாய், தொழிலை காட்டக்ககூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே 2ஆம் எதிர்மனுதாரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.